C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்



# மன்னா..

பொழிவு : 17 APRIL 2025 ஆகாரம் : 04

## மரித்தேன்,

ஆனாலும் இதோ சதாகாலங்களிலும் நான்

## உயிரோடிருக்கிறேன், ஆமென்.

வெளி 1:18



# UPCOMING EVENTS

**All Sun Apr '25** — Sunday
5:00 pm
**OUT REACH MINISTRY - CAMP**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**All Tue Apr '25** — Tuesday
7:30pm
**COTTAGE PRAYER**
Church Members House

**All Tue & Fri Apr '25** — Tue & Friday
5:00pm - 06:00pm
**TAMIL CLASS**
Parsonage - C.S.I. Tamil Parish Alain

**All Wed Apr '25** — Wednesday
7:30pm
**BIBLE STUDY & PRAYER**
Parsonage - C.S.I. Tamil Parish Alain

**12 Apr'25** — Saturday
7:30pm - 09:30pm
**PALM SUNDAY**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**19 Apr '25** — Saturday
7:30pm - 09:30pm
**HOLY COMMUNION SERVICE**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**17 Apr '25** — Thursday
7:30pm - 09:00pm
**MAUNDY THURSDAY**
ARK Hall -Evangelical Church
Campus - Al Ain

**20 Apr '25** — Sunday
8:00am - 10:00am
**EASTER & COMMUNION SERVICE**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**18 Apr '25** — Friday
7:30pm - 09:30pm
**GOOD FRIDAY**
Majlis Hall -Evangelical
Church Campus - Al Ain

**26 Apr '25** — Saturday
7:30pm - 09:30pm
**EVENING SERVICE**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**All Sat Apr '25** — Saturday
6:30pm - 7:30pm
**CHILDREN BIBLE SCHOOL**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

அன்பிற்கினியவர்களே,ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் உயிர்த்தெழுந்த திருநாள் நல்வாழ்த்துக்கள்.




## உயிர்த்தெழுந்த திருநாள்:

கிரேக்கத்தில் CHAIRO என்ற வார்த்தையை, ஆங்கிலத்தில் REJOICE என்றும், இதனை தமிழில் பெருமகிழ்வு என்றும் பொருள் கொள்ளலாம்.ஆம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாள் என்பது பெரு மகிழ்வுக் கொண்டாட்டம் ஆகும்.

ஆண்டவர் இயேசு சிலுவையில் அறையப்பட்ட கி.பி 33ஆம் ஆண்டில் இருந்து உயிர்த்தெழுந்த திருநாள் கடைபிடிக்கப்படுகிறது. ஆயினும் கி.பி:325 இல் ரோமைப் பேரரசராக ஆட்சி புரிந்து கான்ஸ்டான்டைன் மன்னர் காலத்தில் தான் ஈஸ்டர் பண்டிகைக் கடைப்பிடிப்பது அரச கட்டளையாகி, அது பிரபலம் ஆனது.

## பஸ்கா பண்டிகை:

இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்யப்பட்ட அன்றைய நாளில் கொண்டாடப்பட்டது பஸ்கா பண்டிகை இதற்கு கடந்து செல்லுதல் (PASSOVER) என்று பொருள். எகிப்தின் அடிமைத்தன வாழ்வில் இருந்து பாலும் தேனும் ஓடுகிற கானான் தேசத்திற்கு இஸ்ரவேல் மக்கள் கடந்து சென்றதை நினைவுப்படுத்தும் பண்டிகையாக பஸ்கா கொண்டாடப்பட்டு வருகிறது.

புதிய பஸ்கா, ஆண்டவர் இயேசு சிலுவையில் தம்மை பலியாக்கி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த இத்திருநாள் புதிய பஸ்கா ஆகும்.பாவ அடிமைத்தன வாழ்வில் இருந்து விடுதலை அடைந்து பரம கானானாம் நித்திய ஜீவனை அடைவதற்காக பலியான ஆண்டவர் இயேசுவை நினைவு படுத்தும் புதிய பஸ்காவாக ஈஸ்டர் பண்டிகை உள்ளது.

ஆண்டவர் இயேசுவின் உயிர்த்தெழுதலின் சாட்சியாக இஸ்ரேல் நாட்டில் உள்ள காலியான கல்லறை இன்றளவும் உள்ளது.ஆண்டவர் இயேசு பாவத்தின் ஆற்றலை ஆணியடித்து, சிலுவையில் கொன்றொழித்து, மரணத்தை வென்றதின் கொண்டாட்டம் இது. "சாவு வீழ்ந்தது,வெற்றி கிடைத்தது" 1கொரிந்தியர் 15:54.

## யார் புரட்டுவார்கள்?

ஆண்டவர் இயேசுவின் உடலுக்கு சுகந்த வர்க்கமிடும்படி பெண்கள் குழுவினராக கல்லறை அருகே வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே வந்தார்கள். வந்து நமக்காக யார் கல்லை புரட்டுவார்கள் என்று சொல்லிக் கொண்டார்கள் காரணம் அந்தக் கல் மிகவும் பெரிதாய் இருந்தது.

(மாற்கு 16:1—4) ஆனால், ஏற்கனவே அந்தக் கல் தள்ளப்பட்டிருக்கிறது கண்டார்கள்.

பிரியமானவர்களே அவர்கள் சென்றபோது அந்த கல் புரட்டப்பட்டிருந்தது. நாமும் கூட ஆண்டவர் இயேசுவுக்காக அர்ப்பணிப்புடன் பணி செய்ய செல்லும்பொழுது கர்த்தர் பெரியவைகளையே செய்கின்றார், சிந்திப்போம்.

## யாரைத் தேடுகிறீர்கள்?

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்த நாளில், அன்றைக்கு பெண்களுக்கு சொல்லப்பட்ட வார்த்தை சிலுவையில் அறையப்பட்ட இயேசுவைத் தேடுகிறீர்கள். அவர் உயிர்த்தெழுந்தார் என்று அவர்களின் தேடலுக்கான பதிலை கொடுத்து வைத்த இடத்தை பார்க்க அழைத்தார். (மாற்கு 10:6) இன்றைக்கு நம்மிடையே ஆண்டவர் இயேசு கேட்கின்ற கேள்வி, நீங்கள் யாரைத் தேடுகிறீர்கள்? உலகையா அல்லது அன்பின் பலியான இயேசுவையா?

"முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்" (மத்:6:33) சிந்தித்து செயல்படுவோம்.

## யார் செய்வார்கள்?


ஆண்டவர் இயேசுவின் உயிர்த்தெழுந்த செய்தியை, சீடர்களுக்கு சென்று அறிவியுங்கள் என்று அன்றைக்கு பெண்களுக்கு சொல்லப்பட்டது. (மாற் 6:7)

இன்று ஆண்டவர் இயேசுவின் இரட்சிப்பின் நற்செய்தியை அறிவிக்கவும், நலமானதை செய்யவும் யார் செல்வார்கள் என்ற ஏக்கத்தோடு, யாரை நான் அனுப்புவேன்? யார் நமது காரியமாக செல்வார் என்று ஆண்டவர் அங்கலாய்க்கிறார். நன்மையானதை செய்ய, நற்செய்தியை அறிவிக்க, நற்செயல்களை செய்திட நம்மை அர்ப்பணிப்போம், அதுவே பொருள் பொதிந்த ஈஸ்டர் திருநாளாக அமைந்திடும். அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் உயிர்த்தெழுந்த திருநாள் (EASTER) வாழ்த்துக்கள். கடவுள் தாமே ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

இறைப்பணியில்,

ஆயர்.

*Rev. S.Baktha Thiyagarajan*








# சிலுவையோடு காத்திருப்பாயா?

- திருந்துவாய் என்று நான் நினைத்தேன், நீயோ தீர்ப்பை எழுதி விட்டாய்!

- சுமைகளால் சோர்ந்தோரே வருக என்றேன், சிலுவை சுமையை எனக்குத் தந்தாய்!

- படகில் நின்று பறைசாற்றினேன்,நீயோ என் முதுகை படைச்சால் ஆக்கினாய்!

- உயர்ந்தோர் தாழ்ந்தோர் இன்றி சமமாக்கினேன், சாட்டையடியை எனக்குத் தந்தாய்!

- முழு முதல் கடவுளைத் தேடச் சொன்னேன், முள்முடி தலையில் சூட்டி விட்டாய்!

- கை,கால், குஷ்டம் சுகம் தந்தேன்,நீயோ என் கரங்களில் ஆணியை துளைத்து விட்டாய்!

- நடமாட முடியாத முடவனை நடக்கச் செய்தேன்,என் கால்களில் ஆணியை நீ துளைத்தாய்!

- உன் இதயத்தின் பாவத்தை நீக்கி இரட்சிப்பளித்தேன்,என் இதயத்தை ஈட்டியால் பதம் பார்த்தாய்!

- கன்னத்தில் அறைந்தால் மறுக்கன்னத்தை காட்டு என்றேன், நீயோ என் கன்னத்தில் காரித் துப்பி விட்டாய்!

- எழுந்து வா திருந்தி வா என்றழைத்தேன், இகம்—அகம் சரி பாதி ஏற்க மறுத்தாய்!

- உறவே உறவே மனிதம் என்றேன், உடைத்து உடைத்துத் தள்ளி விட்டாய்!

- சுயநல வாழ்வை நீ கொண்டாய், என் பிறர் நல ஆடையை உரித்து விட்டாய்!

- அன்பு அன்பு அன்பே என்றேன், நீயோ சிலுவையில் எனை அறைந்தாய்!

- இதற்கு மேல் நான் உனக்குஎன்ன தருவேன், உயிரையும் தந்து விட்டேன் உணர்வாயோ!

- சீக்கிரம் வர இருக்கும் என்னை வரவேற்க, உனக்கான சிலுவையோடு சீடனாக காத்திருப்பாயா?

இறைப்பணியில்,

ஆயரம்மா

*Mrs . P . Velanganni*



# செயலர் மடல்



கிறிஸ்துவுக்குள் பிரியமான திருச்சபை மக்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த மாதம் முழுவதும், பாதுகாத்த நம் கர்த்தாதி கர்த்தருக்கு நன்றிகளை ஏறெடுப்போம். துதிக்கு பாத்திரரும் துதியின் மத்தியில் வாசம் செய்கிறவரும் ஆண்டவர் இந்த உபவாச காலங்களில் நம்மோடு இருந்தார் இது நம்மை உயிர்ப்பிக்கிற காலங்களாய் அமைந்ததற்காக நன்றி செலுத்துவோம் மீண்டும் கர்த்தருக்குள் துளிர் விட்டு வளர ஏற்ற விதமாய் அமைந்ததற்கு நன்றி செலுத்துவோம். திருச்சபையின் ஆயரின் பெரும் பங்கின் மூலமாய் அனுதினமும் ஆண்டவரோடு என்ற காலை தியானம் சிறப்பாக நடந்து வருகிறது, அதே போல் ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை மாலை அவுட்ரீச் மினிஸ்ட்ரி நன்றாக நடைபெற்ற வருவதற்காய் நன்றி செலுத்துவோம். சுவிசேஷத்தை அறிகிற ஜனங்கள் அதை விருப்பமாய் ஏற்றுக் கொள்ள அந்த வசனம் அவர்கள் உள்ளத்திலே ஆழமாய் பதிய நாம் எல்லோரும் ஜெபிப்போம்.

பண்ணைகளிலே வேலை செய்யும் தொழிலாளர்கள் ஒவ்வொருவர்களுக்காகவும் நாம் ஊக்கமாய் ஜெபிப்போம் அவர்களுடைய குடும்பங்களுக்காக ஜெபிப்போம் விசுவாசத்திலே ஊன்றி கட்டப்பட ஜெபிப்போம் எந்த பாவத்திலும் சிற்றின்பங்களிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளாதபடி அவர்களுக்காய் கருத்தாய் ஜெபிப்போம், அதேபோல் கடந்த மாதம்பிரசங்கியார் திரு. அகஸ்டின் ஜெபக்குமார் பங்கு பெற்றஎழுப்புதல் கூட்டத்தில் அநேகர் கலந்து கொண்டது மிகுந்த ஆசீர்வாதமாய்இருந்தது.

மேலும் VBS – வெக்கேஷன் பைபிள் ஸ்கூல், (விடுமுறை வேதாகம பள்ளி) நம் அழைப்பை ஏற்று கலந்து கொண்ட அருள் திரு சார்லஸ் ஆயர் ஐயா அவர்களுக்கும் ப்ரீத்தா சார்லஸ், அவர்களுக்கும், திருச்சபையின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம், விடுமுறை வேதாகம பள்ளியை மிகவும் சிறப்பாக நேர்த்தியாகவும் நடத்திக் கொடுத்தார்கள். கர்த்தர் தாமே அவர்கள் ஊழியங்களை மென்மேலும் ஆசீர்வதித்து பெருக்கமடைய செய்வாராக. நம் குழந்தை செல்வங்களுக்கு அது மிகுந்த ஆசீர்வாதமாக அமைந்தது. பங்கு பெற்ற அனைவருக்கும் கர்த்தர் நாமத்தை நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

## உங்கள் சிந்தனைக்கு:

### பரிசுத்தமாக்கும் கர்த்தர்:

1 தெசலோனிக்கேயர் 5:23
“சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக.” உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக

நாம் இங்கு கவனிக்க வேண்டிய வார்த்தை என்னவென்றால் பரிசுத்தம் என்றால் என்ன என்பதை பற்றி கவனிக்க வேண்டும். பரிசுத்தம் என்பது மாசற்றது, தூய்மையானது, புனிதமானது. அதாவது தேவன் விரும்பத்தக்கதாக நம் ஆவி ஆத்மா சரீரத்தை முற்றிலுமாக அவருக்காக பரிசுத்தப்படுத்துவது அதுதான் பரிசுத்தம்.

சரீதத்தை பரிசுத்தமாக்குவது எளிமையான காரியம் அதனை குளித்து சுத்தமாக்கிக் கொள்ளலாம் ஆனால் ஆத்துமாவை பரிசுத்தமாக்குவது எப்படி? மற்றும் ஆவியை பரிசுத்தமாய் வைத்துக் கொள்வது எப்படி? வேத வசனம் தெளிவாக சொல்லுகிறது சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் (ஆவி, ஆத்துமா, சரீரம்) பரிசுத்தமாக்குவராக. சரீரத்தைக் கூட பரிசுத்தமாக்குவது கர்த்தர் தான். தேவன் நம்மை பரிசுத்தமாக்கினால் நாம் முற்றிலும் பரிசுத்தமாய் இருப்போம்.

எப்படி பரிசுத்தம் உண்டாகும்?
லேவியராகமம் 20:8 என் கட்டளைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; நான் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்.

ஏன் பரிசுத்தமாக வேண்டும்?
லேவியராகமம் 21:6
தங்கள் தேவனுடைய நாமத்தைப் பரிசுத்தக் குலைச்சலாக்காமல் அவருக்கேற்ற பரிசுத்தராயிருப்பார்களாக;

நாம் ஏன் நம்மை பரிசுத்தமாக வேண்டும்?
நெகேமியா 13:22 ஓய்வுநாளைப் பரிசுத்தமாக்கும்படிக்கு, உங்களைச் சுத்தம்பண்ணிக்கொண்டு வாசல்களைக் காக்க வாருங்கள் ..

தேவனுடைய பிள்ளைகளே தேவன் விரும்புகிற தேவன் கொடுக்கிற பரிசுத்தத்தை பற்றி கொண்டே இருங்கள் கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

**இறைப் பணியில்**

MR. SANTHOSH KUMAR

திருச்சபைச் செயலர்



# இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான திருப்பெயரில் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். இந்த வருடத்தின் மூன்று மாதங்களை நிறைவு செய்து, நான்காம் மாதம் ஏப்ரலில் வாழ்வதற்கு கர்த்தர் உதவி புரிந்துள்ளார். புதிய மாதத்தில் கர்த்தர் நம் அனைவருக்கும் புது பெலன் அருளி ஆசீர்வதிப்பாராக. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் தின வாழ்த்துக்களை உங்களுக்கு தெரிவிக்கிறேன். "அவர் இங்கே இல்லை, தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார்" "He is not here,for he is Risen"

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் எப்போதும் மகிழ்ச்சியின் செய்தியாக அமைகின்றது. மரணத்தை வென்று உயிர்த்த ஆண்டவர் வாழ்வு தருபவராக உயிர்த்துள்ளார் என்பது அனுபவத்தின் மகிழ்வின் செய்தியாகும்.

வாழ்வில் நம்பிக்கையிழந்து, இனி வாழ்வு ஏது என்ற கேள்வியுடன் வாழும்போது இயேசுவின் உயிர்த்தெழுதல் புது நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. இதனால் புதிய தீர்மானத்துடன் முன்னேறி இயேசுவுக்கு நல்ல சாட்சியாளர்களாக வாழ முடிகிறது.

### 1. உயிர்த்தெழுந்த இயேசு பயத்தை மாற்றுகிறார்:

மத்தேயு 28:10 "இயேசு அவர்களை நோக்கி, பயப்படாதிருங்கள் என்றார்". வாரத்தின் முதலாம் நாள் விடிந்து வரும் போது,மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் இயேசுவை அடக்கம் செய்திருந்த கல்லறையைப் பார்க்க வந்தார்கள். அப்போது அவ்விடத்தில் இருந்த தூதன், அவர்களிடம் அவர் இங்கே இல்லை அவர் தாம் சொன்னபடியே உயிர்த்தெழுந்தார். கர்த்தரை வைத்த இடத்தை வந்து பாருங்கள் என்றார். அதைக் கண்டு அவர்கள் அவருடைய சீடர்களுக்கு அறிவிக்க போகிற போது,இயேசு தாமே அவர்களுக்கு எதிர்ப்பட்டு வாழ்த்தினார். அவர்கள் இயேசுவை பணிந்து கொண்டார்கள். இயேசு அவர்களிடம் பயப்படாதிருங்கள் என்று கூறி திடப்படுத்தினார். வாழ்க்கையில் எதிர்பார்ப்பவைகள் நிறைவேறாமல் இருக்கும் போது ஏமாற்றம் அடைகின்றோம். இதனால் தோல்வி அடைந்து விட்டோமோ என்ற ஒரு பய உணர்வு ஏற்படுகின்றது. ஆனால் இயேசு நம்முடன் இருக்கிறார் என்று விசுவாசத்துடன் ஒவ்வொருவரும் வாழ வேண்டும், இதனால் பயத்தினை மேற்கொள்ள முடியும் அதற்கு இயேசு கிறிஸ்து உதவி செய்வார்.

### 2. உயிர்த்தெழுந்த இயேசு நம்முடன் நடந்து வருகிறார்:

லூக்கா 24:15 "இப்படி அவர்கள் பேசி,உரையாடிக் கொண்டிருக்கையில் இயேசு தாமே சேர்ந்து அவர்களுடன் கூட நடந்து போனார்" ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து எப்போதும் நம்முடன் நடந்து வருகிறவர். இயேசுவைக் கல்லறையில் சென்று பார்த்த சீடர்கள், காணாமல் ஆச்சரியப்பட்டார்கள். எம்மாவூருக்குச் சென்ற இரு சீடர்கள் இயேசு கிறிஸ்துவை குறித்து பேசி உரையாடிக் கொண்டு சென்றார்கள். அவர்களுடைய பேச்சை கேட்டவாறு இயேசு உடன் நடந்து போனார். தங்களுடன் நடந்து வருபவர் இயேசு என்று அறியாமல் உரையாடிச் சென்றார்கள்.உடன் நடந்து சென்ற இயேசு அவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்தி, பந்தியில் அமர்ந்து அப்பம் பிட்டுக் கொடுத்தார். நம் ஒவ்வொருவருடனும் இயேசு கிறிஸ்து தினமும் நடந்து வருகிறார். எந்த காரியங்களைப் பேசிக்கொள்கிறோம் என்பதனைக் கேட்கிறார். நம்முடன் நடந்து வருகிற ஆண்டவர் இயேசுவின் கரங்களைப் பற்றிக் கொண்டு வாழ்வோம்.

### 3.உயிர்த்தெழுந்த இயேசு சமாதானம் அருளுகிறார்:

யோவான் 20:19 "கதவுகள் பூட்டியிருக்கையில் இயேசு வந்து நடுவே நின்று, உங்களுக்குச் சமாதானம் என்றார்"

இயேசு கிறிஸ்து சமாதானம் தருபவர்.உலகம் தரக்கூடாத சமாதானத்தை அருளுவேன் என்றார். உயிர்த்தெழுந்த இயேசு,தம்மை உயிருள்ளவராக வெளிப்படுத்தி, ஒவ்வொருவரையும் திடப்படுத்துகிறார். யூதர்களுக்கு சீடர்கள் பயந்திருந்தார்கள். இயேசுவைப்போல் தங்களையும் துன்புறுத்துவார்கள் என்கிற பயம் அவர்களை மேற்கொண்டிருந்தது. ஆகவே பூட்டிய அறையில் இருந்தனர்.இயேசு அவர்கள் நடுவே வந்து சமாதானம் எனக் கூறி திடப்படுத்தினார்.

அன்பிற்கினியவர்களே,உயிர்த்த இயேசு நமது வாழ்வின் பயத்தை மாற்றுவார், உடன் வருவார், சமாதானம் அருளுவார்,நம்மை ஆசீர்வதிப்பார், ஆமென்

Article by

## MR. STEPHEN CHELLARAJ

Men's Fellowship

### மன்னா மார்ச் - 25 மீள் பார்வை...




ஆண்டவர் இயேசுவுக்கே மகிமை. கடந்த மார்ச்-25 மன்னாவைக் குறித்த ஒரு பார்வை. பக்கம் 3-ல் முதலில் நற்செய்தி அறிவித்தவர் பகுதியில் அமைந்த கிணற்றருகே, ஊருக்குள், திருச்சபைக்குள் ஆகிய உரையாடல்கள் வழியே நல்ல சமாரியர் இயேசுவை தெளிவுறக் காணவும், பக்கம் 5-ல் செயலர் மடலில் கடந்த, இம்மாத திருச்சபையின் நிகழ்வுகளின் சுருக்கத்தையும், திரும்புங்கள்-கர்த்தரிடம் திரும்புங்கள் என்ற திருமறைச் சார்ந்த வசனத் தெளிவையும், பக்கம் 7-ல் ஜெபத்தின் வல்லமையைக் குறித்தும், ஒவ்வொருவரும் ஜெப வீரர்களாக மாற வேண்டும் என்பதையும், பக்கம் 8-ல் உபவாசம் என்ற பகுதியில் நமது உடலும் உள்ளமும் தூய்மை பெற வேண்டும் என்றும்,அதனால் இறையாசியை நிறைவாய் பெற முடியும் என்பதை ஜெயன் என்பவரின் நிகழ்வு வழியையும், பக்கம் 10-ல் திறந்த வாசல் என்ற பகுதியில் கந்தமால் உண்மை நிகழ்வும், அனைத்து கட்டுகளுக்குமான திறவுகோலை உடைய இயேசுவைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்பதையும், பக்கம் 11-ல் BREAKING FREE என்ற பகுதியில் நாம் நம்மிடையே காணப்படுகிற தேவையற்ற காரியங்களை, கிளைகளை (BRANCHES) உதறித் தள்ளினால், விட்டொழித்தால் மட்டுமே உயரமுடியும் என்பதையும், பக்கம் 12- ல் சீடர் அந்திரேயாவின் இரத்த சாட்சியான வாழ்க்கை வரலாறு நமக்கெல்லாம் ஒரு உன்னத அறைகூவல் என்பதையும், பக்கம் 15 - ல் IF GOD IS FOR US WHO CAN BE AGAINST US? கர்த்தர் நம் பட்சத்தில் இருக்கும்போது உலகே எதிர்த்தாலும் வெற்றி வாழ்வு என்பதை இறையடியவர்களின் உதாரணத்துடன் தெளிவு படுத்தியும், சிறு பிள்ளைகளின் திருமறைப் புதிர்கள் அனைத்தும் சிறப்பே. மன்னாவுக்கான ARTICLE அனுப்பின அனைவருக்கும் உளமாற வாழ்த்துக்கள், கடவுள் ஆசிர்வதிப்பாராக.

**இறைப்பணியில்,**
**ஆயர்.**



# உயிர்த்தெழுதலும் முதற்பலனும்

1 CORINTHIANS 15, EPHESIANS 4, COLOSIANS 2

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது.

நாம் அனைவரும் கேள்விப்பட்ட வார்த்தையை ஏற்றுக்கொண்டு அந்த வார்த்தையிலே நிலைத்திருந்து , அதை கைக்கொண்டிருந்தால் இரட்சிக்கப்படுவோம் இல்லையென்றால் நம்முடைய விசுவாசம் விருதாவாகிவிடும் .1 கொரிந்தியர் 15:3 இப்படியாக சொல்கிறது நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் . கிறிஸ்து எழுந்திராவிட்டால், நம்முடைய விசுவாசம் வீணாயிருக்கும்; நாம் இன்னும் நம்முடைய பாவங்களில் இருப்போம் .அதுபோலவே இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்-களாயுமிருப்போம். நம்முடைய நம்பிக்கை கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பின தேவன் மேலிருக்கவேண்டும். ஏனென்றால் ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்திரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவராக்கினவரும், இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். குமாரனாகிய அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது. அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேருமானவராக்கிறார் அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது.

அவரே சபையாகிய சரீரத்துக்குத் தலையானவர்; எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர். சகல பரிபூரணமும் அவருக்குள்ளே வாசமாயிருக்கவும், அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று. முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயுமிருந்த நம் அனைவரையும் பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் அவருக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார். நாம் அனைவரும் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையைவிட்டு அசையாமல், ஸ்திரமாயும் உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருந்தால் அப்படியாகும்.

அப்போஸ்தலனாகிய பவுல் உயிர்த்தெழுதலை குறித்து கொரிந்தியருக்கு எழுதும்போது ஜென்ம சரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்ம சரீரமுமுண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு. அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான்

என்றெழுதியிருக்கிறது, பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானவர். முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன்; இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர். மண்ணானவன் எப்படிப்பட்டவனோ மண்ணானவர்களும் அப்படிப்பட்டவர்களே; வானத்துக்குரியவர் எப்படிப்பட்டவரோ, வானத்துக்குரியவர்களும் அப்படிப்பட்டவர்களே, மேலும் மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, வானவருடைய சாயலையும் அணிந்துகொள்வோம். மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது; அழிவுள்ளது அழியாமையைச் சுதந்தரிப்பதுமில்லை.

எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்.மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? இப்படியாய் மரணத்தை ஜெயித்தவர், சாவை வென்றவர், உயிர்த்தெழுந்தவர் நம்மோடு இருக்கிறார் என்று அறிந்து எபேசியர் ௪:௨௩,௨௪,நம்முடைய உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகசிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொள்ளவேண்டும். உயிர்த்தெழுதல் பண்டிகையை வருஷந்தோறும் கொண்டாடி கிறிஸ்து மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்தார் என்பதை தெரிவித்து நாமும் அப்படியே அவருடைய வருகையிலே உயிர்ப்பிக்கப்படுவோம் என்கிற நம்பிக்கையோடு வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

கர்த்தருக்குள் நாம் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நாம் உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருந்து தேவனுடைய ராஜ்யத்தில் நம்மைச் சேர்க்க வல்லமையுள்ளவரை தரித்தவர்களாய் இந்த உலகத்தில் வாழும் காலம் முழுவதும் கிறிஸ்து இயேசுவின் சிந்தை உடையவர்களாய் கிறிஸ்து தம்மை பிதாவின் சித்தத்துக்கு ஒப்புக்கொடுத்தது போல நாமும் நம்மை கிறிஸ்துவிற்குள் மரித்து பிழைத்தவர்களாய்,நம்மை ஒப்புக்கொடுக்கவேண்டும்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.

Article by

MRS. JONISH HERCHIL

Women's Fellowship




சிம்சோன் மிகவும் பலம் வாய்ந்தவன். பெலிஸ்திய சேனைகள் நடுங்கும்படியாக செய்தவன். காரணம் கர்த்தருடைய ஆவி அவருக்கு சில சமயங்களில் வந்தது, அவருக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட பலத்தை அளித்தது. (நியாயாதிபதிகள் 13−16ம் அதிகாரம் வரை வாசிக்கும்போது சிம்சோனின் பலமும், அவனுடைய வீழ்ச்சியும், பின்பு அவனுடைய மரணத்தை குறித்தும் அறிந்து கொள்ளலாம், 4 முறை கர்த்தருடைய ஆவியானவரை பற்றி எழுதியிருப்பதை அறிந்து கொள்ளலாம். அவர் சிம்சோனை ஏவினார், அவன் மேல் பலமாய் இறங்கினார், அவன் மேல் இறங்கினார் என்று பார்க்கமுடிகிறது.

முதலில் கர்த்தருடைய ஆவியானவர் சிம்சோனை ஏவினார். அதனிமித்தம் இஸ்ரவேலை ஆண்டுகொண்டிருந்த பெலிஸ்தியரிடத்திற்கு கொண்டுபோகப்பட்டான். இரண்டாவதாக கர்த்தருடைய ஆவியானவர் அவன் மேல் பலமாய் இறங்கினார். அதனிமித்தமாக எதிராக வந்த கெர்ச்சிக்கிற பால சிங்கத்தை ஒரு ஆட்டுக்குட்டியை கிழித்துப்போடுவது போல கிழித்துப்போட்டான். மூன்றாவதாக கர்த்தருடைய ஆவியானவர் அவன் மேல் இறங்கினபோது, முப்பது பேரை ஒரு தனி மனுஷனாக நின்று அவர்களை கொன்று அவர்களுடைய வஸ்திரங்களை உரிந்துகொண்டு வந்தான். நான்காவதாக கர்த்தருடைய ஆவியானவர் அவன் மேல் பலமாய் இறங்கினபோது கழுதையின் பச்சை தாடை எலும்பை எடுத்து தனி ஒரு மனிதனாக நின்று 1000 பேரைகொன்று குவித்தான்.

இவ்வளவு பெரிய பலசாலி, தெலீலாள் என்னும் ஒரு பெண்ணால் வஞ்சிக்கப்பட்டான்; பாவத்தில் விழுந்தான்; அவனுடைய பலத்தின் ரகசியத்தை கசியவிட்டான்; பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை அலட்சிப்படுத்தினான். இதன் விளைவு பெலிஸ்தியர் அவனை பிடித்து அவன் இரண்டு கண்களையும் பிடுங்கி, அவனை ஒரு வேடிக்கை பொருளாக மாற்றினார்கள். அபிஷேகம் பெற்றவன், அசாதாரணமான மனிதன், நசரேயனாக வளர்க்கப்பட்டவன், ஆனால் பரிதாபம் என்னவென்றால் கர்த்தர் தன்னைவிட்டு விலகினதை அறியாமல் பெலிஸ்தியரின் கைகளில் சிக்கினான். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த ஒரு விசை மாத்திரம் என்னை நினைத்தருளும் தேவனே, பலப்படுத்தும் என்று அவன் ஜெபித்த சூழ்நிலையில், கர்த்தர் மீண்டும் பெலப்படுத்தினார். மீண்டும் அவனுக்கு பெலன் வந்தது. வீட்டை தாங்கி நின்ற இரண்டு தூண்களையும் பிடித்து தள்ளினான். வீடு இடிந்து விழுந்தது. அதினிமித்தமாக அந்த வீட்டில் இருந்த பெலிஸ்தியரின் பிரபுக்கள் உட்பட யாவரும் மடிந்துபோனார்கள்.

கர்த்தருடைய ஆவியானவரை ஒரு போதும் அலட்சியப்படுத்தாதிருங்கள்; அவர் உங்களை விட்டு விலகுவதற்கு நீங்களே காரணமாகிவிடாதிருங்கள். அவரை துக்கப்படுத்தாதிருங்கள். அவரை சோகத்திற்குள்ளாகாத்திருங்கள். அவரை வேதனைப்படுத்தாதிருங்கள். அவர் பெலத்தின் ஆவியானவர். அவர் உங்களோடு கூட இருக்கும்போது, சிம்சோனுக்கு கொடுத்த பெலத்தை உங்களுக்கும் கொடுப்பார். ஆமென்.

Article by

**MRS. MONA PREM**

Youth Fellowship

# காணாத கொடை



ஒரு நோன்பு காலக் கதை:

டெய்சி என்னும் 12 வயது சிறுமிக்கு நோன்பு காலம் எப்போதும் சிறப்பு வாய்ந்தது. ஒவ்வொரு வருடமும் அவர் குடும்பத்தினர் சாக்லேட்,சமூக ஊடக நிகழ்ச்சிகளை தியாகமாக விட்டுக் கொடுக்க நேர்த்தியாக இருப்பார்கள். ஆனால் இந்த ஆண்டு டெய்சிக்கு ஒவ்வொன்றும் வெறுமையாகவே தோன்றியது. காரணம் டெய்சியின் பாட்டி சில மாதங்களுக்கு முன்பு இறந்து விட்டார். பாட்டி இல்லாமல், நோன்பு கால உறுதியான தீர்மானங்கள் பொருளற்றதாக உணர்ந்தாள்.

ஒருநாள் பள்ளிக்குச் செல்லும் வழியில், பள்ளி வாயிலுக்கு வெளியே ஒரு முதியவரை டெய்சி கவனித்தாள். அவர் மெலிந்த உடலில் பழுதாகிய ஷால் அணிந்து வெயிலில் அமர்ந்து கொண்டிருந்தார். சில நாட்களாக அவர் அங்கு இருந்தாலும் யாரும் அவரை கவனிக்கவில்லை. டெய்சியின் மனதில் பாட்டியின் வார்த்தைகள் ஒலித்தன. "நோன்பு என்பது விட்டுக் கொடுத்தல் மட்டுமல்ல, கொடுத்தலும் கூட" ஏசாயா 58:6,7—ல் கூறியுள்ளபடி, "என்னுடைய நோன்பு இதுவல்லவோ" அநீதியின் கட்டுகளை உடைத்து, நெருக்கப்பட்டவர்களை விடுவித்து, ஒடுக்கப்பட்டவர்களை விடுதலைப் படுத்தி, உன் உணவினால் பசித்தவர்களை போஷிக்கவும், நலமற்றவர்களை விசாரிக்கவும், வஸ்திரம் இல்லாதவருக்கு உடை கொடுக்கவும் வேண்டும் என்ற பாட்டியின் வார்த்தைகள் நினைவில் வந்தன.

அப்போது அந்த பள்ளி வாயிலில் இருந்த மனிதருக்கு முதலில் உணவு கொடுத்தாள். அதைப் பெற்ற போது,அவர் கண்களில் கண்ணீர் தெரிந்தது. "நீயே முதல் முறை என்னை கவனித்தாய்" என்று மெதுவாகக் கூறினார். அப்போது டெய்சி மத்தேயு 6:3,4—ல் உள்ளதை உணர்ந்தாள். ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான். (நீதி 19:17) மத்தேயு 25:35,36—ல் இயேசுவின் வார்த்தைகளையும் நினைவு கூர்ந்தாள்.

தன்னுடன் படிக்கும் தோழிகள் தேர்வுக்கு தயார் செய்ய முடியாத நிலைமையில் உள்ளவர்களுக்கும் டெய்சி உதவி செய்தாள். அவர்களுடன் சந்தோஷமாக ஒவ்வொரு நாளையும், உண்மையான ஆனந்தத்தை டெய்சி அனுபவித்தாள். நோன்பு என்பது ஒரு பொருளூற்ற பொறுப்பு அல்ல, அது இருதயத்தில் இருந்து மெய்யான அன்பை வழங்குவது என்பதுவே, நன்றி!

Article by

**MRS. RADIKA SELVAKUMAR**

# DIVINE WONDERS



God's life, not bound by time or space,
A river flowing through endless grace.
Not born of dawn, nor set by dusk,
An eternal spark, forever just.

No cradle rocked, no tomb to rest,
A breath that fills the universe's chest.
In silence deep, His voice is heard,
In every whisper, in every word.

Not in a temple, nor a throne,
His presence hums in heart and bone.
He weaves through stars, in soil and sky,
In every tear, in every sigh.

Yet, He is small in every seed,
And vast in every human need.
A mystery that cannot be solved,
But in His life, all are involved.

In the quiet dawn, where shadows fall,
A gentle voice, Heeding God's call.
With love in His heart and hope in His eyes,
He worked miracles, beneath the skies.

He healed the sick with a touch so kind,
Restored the broken, renewed the mind.
The blind could see, the deaf could hear,
In His embrace, all doubts disappear.

He walked on water, calmed the sea,
Proclaimed the truth, and set hearts free.
A love so pure, a grace so vast,That time
could not fade, nor fear outlast.

He fed the hungry with loaves and fish,
Taught of love, and granted each wish.
For those who sought Him, found their way,
In His miracles, hope would stay.

From turning water into wine,
To raising the dead, He showed divine.
A savior whose love never ends,
A miracle worker, eternal friend.

In every act, in every prayer,
He proves His love, beyond compare.
For Jesus' miracles are not just signs,
But the love He pours, through all of time.

God bless you

Article by

Mrs. Iswarya Obed




யூதா ததேயு இயேசுவின் பன்னிரண்டு சீடர்களில் ஒருவர் இயேசுவைத் தெரிந்தவர்கள் அனைவருக்கும் தெரிந்த ஒரு யூதா உண்டு, அது யூதாஸ் ஸ்காரியோத்து. இவர் இன்னொரு யூதா: யூதா ததேயு.

இயேசுவோடு அவருடைய மரணம் வரைக்கும் தொடர்ந்து நடந்தவர். இயேசுவின் வாழ்க்கையும், போதனைகளும் இவரை இறை பணிக்காக தயாராக்கின.

இயேசு கொலை செய்யப்படுவதற்கு முந்தைய நாள் இரவு உணவின் போது இயேசு தான் மரணமடையப் போவதையும், பின்னர் உயிர்த்தெழப் போவதையும் பற்றி சீடர்களிடம் பேசினார். அப்போது ஒரு சீடர் அவரிடம், "ஆண்டவரே, நீர் உம்மை உலகிற்கு வெளிப்படுத்தாமல் எங்களுக்கு வெளிப்படுத்தப் போவதாகச் சொல்கிறீரே, ஏன்?" என்று கேட்டார். அந்தக் கேள்வியைக் கேட்டவர் யூதா ததேயு.

அதற்கு இயேசு "என்மீது அன்பு கொண்டுள்ளவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பார். நீங்கள் கேட்கும் வார்த்தைகள் என்னுடையவை அல்ல; அவை என்னை அனுப்பிய தந்தையுடையவை. என் பெயரால் தந்தை அனுப்பப்போகிற தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் சுற்றுத் தருவார், இவை நிகழும்போது நீங்கள் நம்புமாறு இப்போதே, இவை நிகழுமுன்பே, சொல்லி விட்டேன்" என்றார். இயேசுவின் மரணத்துக்குப் பின் மற்ற சீடர்களைப் போலவே இவரும் அச்சத்துடன் மறைந்து வாழ்ந்து வந்தார். இயேசு உயிர்த்த பின்பும் இவரிடம் துணிச்சல் வரவில்லை. ஆனால் தூய ஆவியானவரின் நிரப்புதலுக்குப் பின்பே துணிச்சலுடன் நற்செய்தி அறிவிக்கத் துவங்கினார்.இயேசுவின் சீடர்களில் பலரும் மீன்பிடி தொழிலைச் செய்து வந்தவர்கள். யூதா சற்று வித்தியாசமானவர். அவர் உழவுத் தொழிலைச் செய்து வந்தார். அராமிக் மொழியுடன் கூடவே கிரேக்க மொழியும் இவருக்கு நன்றாகத் தெரியும். அது அவருடைய நற்செய்தி அறிவித்தலுக்கு மிகவும் கைகொடுத்தது.

யூதேயா, சமாரியா, மெசபடோமியா, சிரியா மற்றும் லெபனானில் இவருடைய பணி இருந்தது. பைபிளில் யூதா என்றொரு நூல் உண்டு. அந்த நூலை இவர் தான் எழுதினார் எனும் நம்பிக்கை பரவலாக உண்டு. ஆனால் அந்த நூல் காலத்தால் இவருக்குப் பிந்தையது, எனவே இவர் அதை எழுதியிருக்க முடியாது என்பது பல விவிலிய ஆய்வாளர்களின் கருத்தாகும்.

ததேயுவின் பணிகள் மெசபடோமியாவில் மிகவும் வலுவாக இருந்தன. இயேசுவோடு நேரடியாகப் பயணித்த அனுபவத்திலும், தூய ஆவியானவரின் துணையுடனும் அவர் தனது பணியை தீவிரமாய் மேற்கொண்டார். இயேசுவே உண்மையான கடவுள், அவருடைய போதனைகளைப் பின்பற்றுங்கள் என்பதே அவருடைய போதனையின் மையமாய் இருந்தது.

நோய் தீர்க்கும் ஆற்றலும் இவரிடம் மிகுதியாய்க் காணப்பட்டது. ஒருமுறை அங்குள்ள மன்னருக்கு தீரா வியாதி ஒன்று வந்தது. ததேயு அதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டு மன்னனை இயேசுவின் பெயரால் சுகமாக்கினார். இதனால் நாடெங்கும் யூதாவின் பெயரும், அவர் கொண்டு வந்த நற்செய்தியும் பரவியது. நோயாளிகள் பலர் ததேயுவை நாடி வர ஆரம்பித்தனர். அவர்கள் அனைவருக்கும் ததேயு நற்செய்தியையும், சுகத்தையும் அளித்தார். "இயேசுவின் பெயரால் நலம்பெறு" என்று சொல்வதை அவர் வழக்கமாக்கிக் கொண்டிருந்தார்.

ஆர்மீனியா பகுதியிலும் ததேயுவின் பணி வீரியத்துடன் இருந்தது. ஆர்மீனியாவில் இவர் ஆற்றிய பணிகளுக்காக இவர் ஆர்மீனியத் திருச்சபையின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். ஆர்மீனியாவே உலகின் முதல் கிறிஸ்தவ நாடு.

ததேயு கி.பி 43ம் ஆண்டிலிருந்து துவங்கி சுமார் பதினைந்து, இருபது ஆண்டுகள் அங்கே பணியாற்றினார். ஏராளமான மக்கள் இயேசுவைப் பற்றி அறிந்து கொள்ள அவருடைய போதனைகள் காரணமாயின.

பின்னர் ததேயு, பாரசீகத்தில் பணியாற்றுவதற்காக வந்தார். பாரசீகத்தில் சிலை வழிபாடு அப்போது மிகுதியாய் இருந்தது. ததேயு அந்த இடத்துக்குச் சென்று துணிச்சலுடன் அவர்களிடம் இயேசுவைப் பற்றிப் போதித்தார். அங்கே ஒரு இடத்தில் சிலை வழிபாடு நடந்து கொண்டிருந்தது, ததேயு சிலைகளை வழிபடுவதால் பயனில்லை என்று மக்களிடையே தைரியமாக உரையாற்றினார்.

கி.பி 67. தற்போதைய ஈரானில் கொலை வெறி கொண்ட மதவாதிகளால் பிடிக்கப்பட்டு

கோடரியால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

அக்டோபர் 24ம் தேதியை அவர்கள் புனித யூதா ததேயு தினமாக கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் கொண்டாடுகின்றனர்.

இயேசுவின் மீது ஆழமான விசுவாசம் வேண்டும் என்பதையும், தூய ஆவியானவரால் நிரப்பப் பட வேண்டியது அவசியம் என்பதையும் ததேயுவின் வாழ்க்கை நமக்குப் போதிக்கிறது

Article by

## MRS. AJINSHA




"பின்பு இயேசு எல்லாரையும் நோக்கி: ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து,தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக் கடவன்." லூக்கா 9:23.

சிலுவை என்பது ரோமர்களால் தவறு செய்பவர்களை மிகவும் கொடூரமான முறையில் சித்திரவதை செய்து தொங்கவிடப்பட்டு கொல்ல ப்படுவதற்கு பயன்பட்ட கருவி ஆகும்.

சிலுவை மரணம் அப்படிப்பட்டதாக இருக்கும் போது இயேசு கிறிஸ்து, தன்னை பின்பற்றி வருபவர்கள் பாவமில்லாமல், பரிசுத்தமாய் தம் சிலுவையை எடுத்துக்கொண்டு பின்பற்ற வேண்டும் என்றார். சிலுவை சுமப்பது என்பதன் உண்மையான அர்த்தம் என்னவென்றால்: *மற்றவர்கள் செய்த குற்றங்களை மன்னிப்பது,அதை உள்ளத்தில் வைத்துக் கொண்டு வஞ்சகம் தீர்ப்பது அல்ல.

மற்றவர்கள் சாதாரணமாக செய்யும் பாவ காரியங்களைச் செய்யாமல் அந்த சோதனையிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்வது. *நம்முடைய சித்தத்தை செய்யாமல் கடவுளுடைய சித்தத்தை நம் வாழ்வில் நிறைவேற்றுவது. *யாராவது உதவி என்று அழைக்கும் போது மனமுவந்து உதவி செய்வது. *மற்றவர்கள் நம்மைத் தேவையில்லாமல் தூற்றும் போது பதிலுக்கு பதில் கொடுக்காமல் கர்த்தருடைய கரத்தில் விட்டு விடுவது, அவர்களுக்காக ஜெபிப்பது.

பிறர் அநியாயமாய் நம்மில் குற்றம் சாட்டும் போது பொறுமையாக இருப்பது.
இப்படி நாம் சிலுவையை சுமப்போமானால் அது நமக்கு பாரமாக இல்லாமல்,நமக்கு சந்தோஷமாகவும் களிப்பாகவும் மாறிவிடும். அப்போதுதான் அப்போஸ்தலனாகிய பவுலோடு சேர்ந்து நாமும்,

"கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில றையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்பு கூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்"கலாத்தியர் 2:20 என்று மன மகிழ்வோடுக் கூற முடியும்,ஆமென்

Article by

## MR. RAJAVEL

# TRUSTING GOD AMONG THE STRUGGLES

Cradling her limp, 2-month-old son, the mom ran out the door calling her husband for help.

The husband found the child to be silent and still, with blood running from his nose. His skin was pale, and he wasn't breathing.

As soon as the father saw the motionless son, he held him in his arms, rushed to the hospital. On the way he took a small prayer, "In the name of Jesus, bring back my boy," he said. "In the name of Jesus, put air into his lungs."


The child's skin was turning blue, and he was cold to the touch. The dad wondered if they'd already lost him. But, as he prayed, the son suddenly took a deep breath.

During this journey he poured out his heart as a song to the LORD which eventually became very famous globally.

Every individual on this earth undergoes some type of struggle. It can be a light one or a breath taking one.

The only assurance we have amidst this storm is our LORD JESUS CHRIST.

A tiny tear, A tiny prayer, A tiny silence is more than enough for HIM to reach out and to comfort us.




**"In the blink of an eye, life flashed right in front of my eyes, never knew that the fear could cripple my chest. In the blink of an eye, the light left. I need You more, I need You more, more than ever before. I need You more."**

# MARCH WINNERS

## KIDS COLORING

- Iniyal Evangelin
- Smyrna Syntyche
- Hazel Hartlyn
- Jesil Bernice
- Shaana Liliya
- Johanna Jose
- Ashika Arun

## WORD SEARCH

- Iniyal Evangelin
- Smyrna Syntyche
- …rinsha
- …el Hartlyn
- Jesil Bernice
- Joshua Jose.

## FIND THE WAY


- Iniyan Immanuel
- Smyrna Syntyche
- Abishua
- Sherinsha
- Hazel Hartlyn
- Jesil Bernice
- Shaana Liliya
- Johanna Jose
- Ashika Arun.

## CROSS WORD

- Iniyan Immanuel
- Sherinsha













# CHILDREN BIBLE SCHOOL

# BEGINNER ART





# 2 KINGS 14- 25

## 2 இராஜாக்கள் 14–25

### MARCH '25 - QUESTIONS

1. யோனாவின் ஊர் எது?
2. திப்சா பட்டணத்தார் யாருக்கு வாசலைத் திறக்கவில்லை
3. ஆகாஸ் கட்டளைப்படி பலிபீடம் கட்டியது யார்?
4. கர்த்தரின் வழிகளை போதித்த இடம் எது?
5. யூத பாஷையிலே பேச வேண்டாம் என்று கூறியவர்கள் யார்?
6. ஏசாயாவின் தகப்பன் பெயர் என்ன?
7. குளத்தை உண்டு பண்ணின ராஜா யார்?
8. மட்ட நூல் எங்கே பிடிக்கப்படும்?
9. பெண் தீர்க்கதரிசியின் கணவன் பெயர் என்ன?
10. எருசலேமுக்கு எதிரே இருக்கிற மலை பெயர் என்ன?
11. பாபிலோனிய ராஜாவுக்கு விரோதமாக கலகம் பண்ணினவன் யார்?
12. தேசத்தில் பயிரிட விடப்பட்டவர்கள் யார்?

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 15ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

### மார்ச்-2025 மாத வினாவிற்கான விடைகள்

1. 2 இராஜா 1:17
2. 2 இராஜா 2:24
3. 2 இராஜா 3:22
4. 2 இராஜா 4:35
5. 2 இராஜா 5:17
6. 2 இராஜா 6:6
7. 2 இராஜா 7:16
8. 2 இராஜா 8:26
9. 2 இராஜா 9:25
10. 2 இராஜா 10:28
11. 2 இராஜா 11:14
12. 2 இராஜா 12:20
13. 2 இராஜா 13:21


### மார்ச்-2025 மாத வினாவிற்கான விடைகள் எழுதியவர்கள்

திருமதி.ஜெனிபர் பால்,
திருமதி.ராதிகா செல்வக்குமார்,
திருமதி.வனிதா ஜெயக்குமார்,
திருமதி.பியூலா ஏசுராஜ்,
திருமதி.பிப்ளின் நெல்சன்,
செல்வி.அஜின்ஷா,
திருமதி.ஜெயின் ராஜவேல்,
திருமதி.ரேனா ஜோஸ்,
திருமதி.ஜோனிஸ் ஹெர்சல்,
திருமதி.ரோஸ்மேரி.

Name:

Date:

# Kids Coloring





Jesus died on a cross for your sins. He was layed in a tomb and on the third day he rose again.

Name : ..............................................

# HE IS RISEN

Guide the women to the tomb.



# The Resurrection of Jesus

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| D | E | O | E | T | A | L | I | P | E | E | L | R | O |
| O | O | A | M | S | C | R | U | C | I | F | I | E | D |
| O | I | U | S | A | E | O | S | W | T | C | S | D | B |
| L | Y | E | B | T | R | C | S | Y | O | E | T | O | I |
| B | G | F | P | T | E | Y | I | T | L | M | D | P | C |
| P | A | I | D | E | I | R | N | P | O | Y | E | A | H |
| V | C | L | O | E | A | N | I | M | S | N | H | N | S |
| C | H | R | I | S | T | C | G | E | D | T | E | R | U |
| P | L | R | E | V | S | N | E | T | O | H | E | C | N |
| C | C | A | D | I | E | O | I | G | H | T | O | O | D |
| R | I | N | D | S | S | T | L | O | E | O | O | R | A |
| O | S | U | S | E | J | O | N | P | N | C | M | M | Y |
| S | T | E | E | R | G | T | E | A | F | A | N | A | B |
| S | N | O | I | T | C | E | R | R | U | S | E | R | S |

DOUBTINGTHOMAS
WOMEN
TOMB
SUNDAY
GOLGOTHA
CRUCIFIED
CHRIST

PILATE
JESUS
RESURRECTION
DISCIPLES
EMPTY
LIFE
BLOOD


BLOOD
BODY
CROSS
MARY
SPICES
PEACE
ANOINTED

EASTER
ALIVE
PETER
STONE

Name : ..............................................................

WORD SEARCH

**Name :** ..............................................................................




## ACROSS

1 Jesus

5 Doubting __

6 Jesus rode a __ into Jerusalem

7 Disciple who denied knowing Jesus

10 Easter season

11 Colored Easter __

13 __ of Gethsemane

16 Easter celebrates the __ of Jesus

17 Sunday before Easter

14 __ betrayed Jesus

15 Easter animal?

## DOWN

2 After 40 days, Jesus ascended to __

3 An angel rolled away the __ covering the tomb

4 People greeted Jesus with ___ branches

6 where Jesus died

8 Mary __ discovered Jesus had risen

9 __ sentenced Jesus to die

12 Season before Easter

# APRIL - 2025

| | |
|---|---|
| 01-APRIL | Mrs. Olivia Sherin |
| 02-APRIL | Ms. Aaliya B. Babina D/o Babu Abraham |
| 02-APRIL | Mr. Blessin Paul |
| 03-APRIL | Mr. Alvin Kumar Asirmanns |
| 03-APRIL | Master. Alan Manis S/o Alvin Kumar Asirmanns |
| 04-APRIL | Master. Regan Shan S/o Balaji Ramaiyan |
| 06-APRIL | Mr. Herchil Harish |
| 09-APRIL | Mr. A. Yobu |
| 09-APRIL | Mr. A. Vijay |
| 10-APRIL | Mr. S. Ghilton Raj |
| 10-APRIL | Mrs. Nisha |
| 11-APRIL | Mr. A. Stalin Jose |
| 11-APRIL | Mrs. K. Santhiya |
| 16-APRIL | Mrs. Vimala Nicson |
| 17-APRIL | Ms. Diniya Sunshine D/o Rajavel D. |
| 18-APRIL | Mrs. Ramya Joel |
| 20-APRIL | Ms. Jervin Rajo S/o Bervin Meshak S. |
| 21-APRIL | Mr. Babu Abraham |
| 22-APRIL | Mrs. Sathiya Mary |
| 23-APRIL | Mr. Dhana Sekar |
| 24-APRIL | Mrs. D. Mercylin Latha |
| 24-APRIL | Mr. S. Selva Ezhil |

*"For through wisdom your days will be many, and years will be added to your life."* *-proverbs 9:11*

| | |
|---|---|
| 27-APRIL | Master. Solomon Livingston S/o Livingston Samuel |
| 28-APRIL | Mr. M. Santhosh Kumar |
| 29-APRIL | Mr. Daniel Durai Singh |
| 30-APRIL | Ms. Sherin Shah D/o Selvistor Solomon |
| 30-APRIL | Mr. G. Thangam |




**05- APR** — Mr. Kingsly Stoobert & Mrs. Salini Vimala Kingsly

**13-APR** — Mr. Sunith Samuel & Mrs. Shiby Angel

**16-APR** — Mr. Glymond Fenzer & Mrs. Sweetlin Abi

**19-APR** — Mr. Nelson Sopitha Raj & Mrs. Biblin Christabel

**26-APR** — Mr. Melbin Paul & Mrs. Shaly Jesie

*"Two are better than one, because they have a good return for their labor: If either of them falls down, one can help the other up."*

-Ecclesiastes 4:9-10

# VACATION BIBLE SCHOOL - 2025














































## DAY 1- Selfie










## DAY 2- Accepting in Christ











## DAY 3- *Jesus is my Friend*










## DAY 4- *Obedience*














# DAY 5- *Live Like Jesus*















# VACATION BIBLE SCHOOL - 2025

## Special Kids Program








EDITOR
THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348
Email: csitcalain@gmail.com
Web: csitamilparishalain.org


STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY

*I am the Living One;*

I was dead, and now look,

*I am alive*

for ever and ever!

–Revelation 1:18